# கல்லூரிகளில் பட்டமளிப்பு விழா



கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை மாணவிக்கு பட்டம் வழங்கிய பெங்களூரு டெக் மகேந்திரா நிறுவனத்தின் துணைத் தலைவர் கே.என்.வரதராஜன் .

**கே.எல்.என். பொறியியல் கல்லூரி:** மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் 21 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது. இதில், பெங்களூரு டெக் மகேந்திரா நிறுவனத்தின் துணைத் தலைவர் கே.என். வரதராஜன் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிப் பேசினார்.

இதில், கல்லூரித் தலைவர் கே.என்.கே. கார்த்திக், செயலர் கே.என்.கே. கணேஷ், பொருளாளர் பி.கே. மோதிலால், கல்லூரி முதல்வர் ஏ.வி. ராம்நாத் உள்பட பலர் பேசினர். இதில், 565 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

# கேஎல்என் பொறியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

■ மதுரை

மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரியில் 21-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது.

கல்லூரித் தலைவர் கே.என்.கே.கார்த்திக் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் ராம்பிரசாத் வரவேற்றார்.

இதில், பெங்களூரு டெக் மகிந்திரா துணைத் தலைவர் கேஎன்.வரதராஜன், 565 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசும்போது, மாணவர்கள் தங்கள் திறமைகளை முழுமையாக அறிந்து வாழ்வில் முன்னேற வேண்டும். மாணவர்கள் பெற்றோரை வாழ்நாள் முழுவதும் நினைவில் கொள்ள வேண்டும் என்றார். இதில் அண்ணா பல்கலைக்கழகத்தின் தர வரிசையில் இடம் பிடித்த 8 மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.



▲ மதுரை கேஎல்என் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், மாணவிக்குப் பட்டம் வழங்கினார் பெங்களூரு டெக் மகிந்திரா துணைத் தலைவர் கேஎன்.வரதராஜன். உடன் கல்லூரித் தலைவர் கே.என்.கே.கார்த்திக் உள்ளிட்டோர்.

நிகழ்ச்சியில் கல்லூரிப் பொருளாளர் பி.கே. மோதிலால், இணைச் செயலாளர் கே.எஸ்.பாப்ஜி கோபிநாத், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கல்லூரிச் செயலாளர் கே.என்.கே.கணேஷ் நன்றி கூறினார்.